ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி ௵ கார்த்திகை மீ பகுதி ௰௧.

Vol. 8. November & December 1931. **No. 11.**

மணவாளமாமுனிகள்

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

கோயிற் கந்தாடை யண்ணனருளியது.

எம்பெருமானாரது அபராவதாரமென்று கொண்டாடப்படுபவரும், நம்பெருமாளால் ஆசார்யப்ரதிபத்திபண்ணிப் பாராட்டப்பெற்ற பெருமையுடையவரும், அஷ்டதிக்கஜ ஸ்தாபனாசாரியரும், வசனபூஷண முதலிய ரகஸ்யங்கள் பலவற்றிற்குப் பேருரை வகுத்தருளிய பெருமையாளரும், மாறன் பணித்த திராவிடவேத சாகரமான திருவாய்மொழிப்பொருளை 'நூற்றந்தாதி'யாகச் சுருக்கி மிகவும் நயம்பட வுரைத்தருளியவரும், விசதவாக்சிகாமணி யென்று முன்னோர்களாற் போற்றப்படுபவரும், யதீந்திராகிய உடையவர் பக்கல் பேரார்த்தி தலையெடுக்கப்பெற்று அதனால் ஆர்த்திப்ரபந்தம் என்னும் அரிய ப்ரபந்தத்தை அருளிச்செய்து யதீந்திரப்ரவணர் என்னும் திருநாமம் பெற்றவரும், பெரியஜீயருமான ஸ்ரீமணவாள மாமுனிகள் விஷயமாகப் பூர்வாசார்யர்களிற் சிலர் அருளிச்செய்த அருமை பெருமைவாய்ந்த பழைய தமிழ்ப் பிரபந்தங்கள் பல,

அவற்றிற் சிலசில செய்யுட்கள் யதீந்திரப்ரவணப் பிரபாவம் முதலிய நூல்களில் மேற்கோள்களாக எடுத்தாளப்படுவனவன்றி அந்நூல்கள் முற்றும் கிடைத்தில. ஆயினும், ஸ்ரீமணவாளமாமுனிவரால் அருளிச்செய்யப்பட்டவைகளும அவரைப்பற்றிப் பூர்வர்களால் அருளிச் செய்யப்பட்டவைகளுமான பிரபந்தங்களைத் தொகுத்து நித்யாநுசந்தானக் கிரமத்தில் முன்னோர்கள் அநுஸந்தித்து வந்தனர்போலும். அம்முறை யாதுகாரணத்தாலோ அருகுவதாயிற்று. அவ்வாறு தொகுக்கப்பட்ட மிகப்பழைய சிதைந்த நித்யாநுசந்தானப் பிரதியொன்று அடியேன் காணநேர்ந்தபொழுதுண்டான மகிழ்ச்சியும் வியப்பும் அளவுகடந்தன. அதில பெரிய ஜீயர் அருளிச்செய்த நூல்களோடு அவர் விஷயமான சில ப்ரபந்தங்களும் காணப்பட்டன. அவை: (1) கோயிற் கந்தாடையண்ணனருளிச்செய்த "மணவாளமாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு" (2) பரவாதி கேசரியாரருளிய "ஸ்ரீசைலவைபவம்" (3) பிரதிவாதி பயங்கர அண்ணனருளிய "அமலனுதிப்பிரானென்னும் பதாதிகேசமாலை" (4) அப்பிள்ளாரருளிய "சம்பிரதாய சந்திரிகை" முதலியன. அவற்றில், கண்ணிநுண்சிறுத்தாம்பு என்பது கோயிற்கந்தாடையண்ணன் தமது ஆசாரியராகிய வரவரமுனிவர்பாற்செய்த ஆசார்யநிஷ்டையை வெளியிடுவது. தம்மாசார்யராகிய நம்மாழ்வார் விஷயமாக மதுரகவிகள் அருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பென்பது முதற்குறியாற் பெயர்பெற்றது. இஃது அங்ஙனமன்றேனும் இதுவும் அது போன்று ஆசார்ய நிஷ்டையை வெளியிடுகின்ற பொருளொற்றுமைபற்றி அப்பெயர் பெறுவதாயிற்று

தனியன்.

நேரிசை வெண்பா.

எக்குணத்தோ ரெக்குலத்தோ ரெவ்வியல்போ ராயிடினும்
அக்கணத்தே நம்மிறைவ ராவரே—மிக்கபுகழ்க்
காரார் பொழிற்கோயிற் கந்தாடை யண்ணனென்னும்
பேரா ளனையடைந்த பேர்.

[இயல்பு - தன்மை. அக்கணத்தே - அப்பொழுதே; கணம் - க்ஷணம், இறைவர் - தலைவர். பேராளன் - பெருமையுடையோன்.]

நூல்.

கட்டளைக்கலித்துறை.

சீருற்ற செஞ்சொற் றிருவாய் மொழிப்பிள்ளை செம்முகமும்
தாருற்ற மார்புந் தளிரேய் பதங்களுந் தன்மனத்துப்
பூரித்து வாழு மணவாள மாமுனி பொன்னடிகள்
பாரிற் றனித்த வடியேன் சரணென்று பற்றினேனே (க)

[சீர் - சிறப்பு. தார் - மாலை. தளிர் எய் பதம் - தளிர் போன்ற திருவடிகள். பூரித்தல் - நிரப்புதல். பார் - உலகு. தனித்த அடியேன் - கதியற்றவனாகிய அடியேன். சரணென்று - தஞ்சமென்று.]

பற்றினன் செம்மைத் திருவாய் மொழிப்பிள்ளை பாதங்களே
உற்றனன் செம்மறை யுள்ளதெல் லாமிவை யுண்மையென்றே
கற்றனன் கோயில் மணவாள மாமுனிக் கார்முகிலைப்
பெற்றன னிங்கடி யேனினி மேற்பிற வாமலுக்கே (உ)

[செம்மறை - நேர்மையான வேதம். கார்முகில் - கரியமேகம்; மணவாளமாமுனிக்கார்முகில் - பிரதி ப்ரயோஜனத்தை யெதிர் பாராமல் மழை பெய்து உலகை உய்விக்கின்ற மேகம் போன்று அடியார்களை அருள்செய்து உய்விப்பவர்.]

பிறவாமல் வாழ்விக்கும் பேரரு ளாளர் பெருமை யென்றும்
துறவாத சிந்தை யெதிராசன் றுய்ய பதங்கணெஞ்சில்
மறவாத சீலன் மணவாள மாமுனி மாமலர்த்தாள்
பறையாத வாசகர் யாரவர் பஞ்சம பாதகரே (ங)

[பொருளாளர் - காஞ்சிபுரத் திருமால். துறவாத - நீங்காத. தூய்ய பதங்கள் - பரிசுத்தமான திருவடிகள்; அடைந்தாரைப் பரிசுத்தராக்குந் திருவடிகள் என்றுமாம். பறைதல் - சொல்லுதல்; துதித்தல். பஞ்சம பாதகர் - ஐம்பெரும் பாவங்களைப் புரிவோர்; அவை:— பொய், கொலை. களவு, கள், காமம் என்பன.]

பாதக முள்ளவை தாமே யொழித்துப் பரிந்தவர்க்குச்
சாதக மானது மீதென்று கொண்டு சரண் கொடுக்கும்
மாதக வோன்மண வாள முனிப்பரன் மாமலர்த்தாட்
பாதுகை யைச்சர ஞய்முடி மேற்கொண்டு பற்றினர்க்கே (ச)

[பரிந்து - தாமே இரங்கி. சாதகம் - அனுகூலம். மாதகவோன் - மிக்க மேன்மையுடையோன். பரன் - மேலோன். தாள் பாதுகை - திருவடிநிலை].

நற்கேச வன்றமர் நற்றவத் தோர்நய னங்களுக்குப்
பொற்கோல மேனியன் பூதலத் தோர்செய்த புண்ணியமாம்
முக்கோல் தரித்த மணவாள மாமுனி மூர்த்திதனை
எக்கோடி காலமுஞ் சிந்தைசெய் வார்தமக் கீடில்லையே (ரு)

[தமர் - அடியார். நயனம் - கண். பொற்கோலமேனி - அழகிய தோற்றமுடைய திருமேனி. முக்கோல் - திரிதண்டம். ஈடு - ஒப்பு.]

இல்லையென் றேயெண்ணி யென்பவக் காட்டை யெரியிலிட்டு
நல்லருள் மாரிபெய் தென்னைத் தளிர்ப்பித்து நன்குதன்பால்
தொல்லருள் ஞானம் விளைத்தாழ்ந்த போகத்தைத் துய்ப்பிக்கவே
வல்லவன் கோயில் மணவாள யோகியை வாழ்த்துவேனே (சு)

[எண்ணி - எண்ணெவென்பதன் திரிபு. பவக்காடு - பாவமாகிய காடு. எரி - நெருப்பு. அருள்மாரி - அருளாகிய மழை. ஆழ்ந்த போகம் - எல்லை காணாத பேரின்பம். துய்ப்பித்தல் - அனுபவிக்கச் செய்தல்]

வாழ்த்துவே னெந்தை மணவாள மாமுனி மாமலர்த்தாள்
தாழ்த்துவென் யானவன் தாளிணைக் கீழ்ச்சிரந் தாரணியில்
காழ்த்திடுஞ் செல்வ முதல்முக் குறும்புங் கரிசறவே
பாழ்த்திடு மென்ற வதிகோர பாவங்கள் பற்றறவே (எ)

[தாள் இணை - இரண்டு பாதங்கள். தாரணி - பூமி. காழ்த்தல் - வைரமேறுதல்; காழ்த்திடு முக்குறும்பு எனக்கூட்டுக. குறும்பு - அகங்காரம்;

செல்வமுதல் முக்குறும்பு - செல்வம், கல்வி, ஜாதி என்பன. "வஞ்சமுக் குறும்பாங்குழி" என்பதுங்காண்க. கரிசு அற - குற்றம் நீங்க. பாழ்த்திடும் - என்னைப் பாழ் செய்கின்ற, அதிகோர பாவம் - மிகக் கொடிய பாவம்.]

பாவங்கள் பற்றறும் பாசங்கள் பற்றறும் பற்றிவைகும்
கோவங்கள் பற்றறுங் குற்றங்கள் பற்றறுங் கோடிசன்மத்
தாவங்கள் பற்றறுந் தண்ணரங் கன்புகழ் சாந்தகுண
தீவன் கருணை மணவாள யோகியைச் சிந்திக்கவே (அ

[பாசங்கள் - ஆசைகள். வைகுதல் - தங்குதல். சென்மத்தாவம் - பிறப்பின் வெம்மை. சாந்தகுணதீவன் - அமைந்த குணங்களால் விளங்குவோன்.]

சிந்தித் தரங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்துமெய்ம் மாமறையோர்
புந்திக்குள் மேவும் வரயோகி தம்மைப் புகைந்துசிலர்
நிந்திக் கினுமே விடாரிது காணவர் நீர்மை நெஞ்சே (கூ)

[சென்னி - தலை. நிச்சலும் - நாள்தோறும். மறையோர் - அந்தணர். புந்தி - புத்தி, மேவுதல் - அமர்தல். புகைதல் - மனதிற் பொறுமை கொள்ளுதல். நீர்மை - பெருந்தன்மை.]

நெஞ்சே யனைய வடியார் நிறங்கொண்ட நிச்சயமாம்
மஞ்சேறு சோலை யரங்கப் பதிதனில் வாதியர்க்கு
நஞ்சே யனைய மணவாள யோகியிந் நாளளிக்கும்
தஞ்சேவை தன்னை யிகழ் வார்க்கல் லாலவர் தாமிட்டரே (ய)

[நெஞ்சே அனைய அடியார் - தமது திருவுள்ளம்போன்ற தொண்டர்; அந்தரங்க சிஷ்யர் என்றவாறு. நிச்சயமாம் தஞ்சேவை எனக்கூட்டுக. நிறம் - மார்பு; இருதயம். (ஆகுபெயர்) நிச்சயம் - சித்தாந்தம். அவர் திருமேனியைக் கருத்திற்கொண்டு தியானித்திருத்தலையே தமக்குப் பெரும் பேறாகக்கருதுவது அவ்வடியாரியல்பென்க.]

இட்டர்கள் வாழ வெதிராசர் வாழ விருநிலத்தே
சிட்டர்கள் வாழநந் தேசிகர் வாழச் செகத்திலுள்ள
துட்டர்கள் மாள மணவாள மாமுனி தோன்றினனே
எட்டு மிரண்டு மறியாரிங் கேசினும் யாவருமே (யக)

[சிட்டர்கள் - ஸதாசாரசீலர். தேசிகர் - ஆசாரியர். எட்டும் இரண்டும் அறியார் - ஒன்றுமறியாதவர். (உலகவழக்கு) ஏசினும் - இகழ்ந்தாலும். யாவரும் - என்ன கிடைக்கும்.]

யாவரு மூய்ய மணவாள யோகித யாளுவென்னப்
பூமகள் மண்மகள் புண்ணிய மாயிந்தப் பூதலத்தே
தாமவ தாரஞ் செயாதிருந் தாற்சட கோபர்திரு
வாய்மொழி யோடு கடலோசை யோடென்ன வாசியுண்டே (௰௨)

[பூமகள் மண்மகள் புண்ணியமாய் - ஸ்ரீதேவி பூதேவிகள் செய்த பாக்கியமாக, திருவாய்மொழியோடு கடலோசையோடு - திருவாய்மொழிக்கும் கடல் முழக்கத்திற்கும். என்னவாசியுண்டு - என்ன வேற்றுமையுண்டு.]

வாசி யறிந்த வதரியில் நாரண ரைர்மணங்கொள்
தேசுடை யெந்தை மணவாள மாமுனி சீர்தழைப்பச்
சீர்சயி லேச தயாபாத் திரமெனுஞ் சீர்மந்திரம்
தேசிக ஞய்க்கண் டுரைத்தாரிவ் வையகஞ் சீருறவே (௰௩)

[வதரி - பதரிகாச்ரமம். தேசு - ஒளி. தேசிகனுய்க்கண்டு - இவரையே ஆசாரியராகக் கண்டு. உரைத்தார் - இம் மந்திரத்தை உரைத்தாரென்க. வதரியில் நாரணர் உரைத்தார் எனக் கூட்டுக.]

கண்ணிநுண் சிறுத்தாம்பு முற்றும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி வைகுண்டப் பெருமாள் சந்நிதி மாகாத்மியம்.

[இது, ஸ்ரீகாஞ்சி ஸ்தலபுராணத்திலிருந்து குப்பண்ணு வென்ற திருக்கோஷ்டியூர் ஸ்ரீ. உ வே. ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் மொழி பெயர்க்கப்பெற்றது.]

விதர்ப்ப தேசத்தில் வாய்மையோடு ஐம்புலன்களையுமடக்கிய விரோசனன் என்ற ஓர் அரசனிருந்தான். இவன் ருக்மியென்ற அரசனுடைய புதல்வன். செங்கோன்மையோடு பல்லுயிரோம்பும் அரசியலமையப் பெற்றவன். சிறந்த வறிவுடையவன். இத்தகைய கோமகனுக்கு மஞ்சளை யென்பாள் ஒருத்தி மனைவியாயினள். இவள் அழகும், கணவன் மனமறிந்தொழுகும ஒழுக்கமும், நற்குணங்களும் ஒருங்கமையப்பெற்றவள். இப்பெற்றியுடையாளுடன் கூடியிருந்து அரசன் குண்டினம் என்ற நகரத்தை அரசாண்டு வந்தான். இவன் தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் ஆண்டுவருகின்ற நிலைமையைக்கண்ட நகரமாந்தரனைவருங் கொண்டாடினர்கள்.

இவனுக்குப் புத்திரப்பேறில்லாதொழிய அதனிமித்தமாகத் தவம் புரிந்தனன். அதனாலும் மகப்பேறுண்டாகவில்லை. அதன்மேல் சிறந்த வேதியர்களை அழைத்து வந்தன வழிபாடியற்றி அவர்களை நோக்கி 'ஸ்வாமி! புத்திரப்பேறில்லா அடியேன் புதல்வர்களைப் பெற்றின்புறுவதற்கு எத்தகைய செயலைச் செய்யவேண்டுமென்பதைத் தேவரீர்கள் ஒருங்கு கூடிப் பரியாலோசனை செய்து சொல்லவேண்டும்' என்று வேண்டினன்.

அப்பொழுது அந்தணாளர்கள் அரசனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்கள்.—அரசரேறே! நீர் எப்பொழுது கைலயங்கிரியில் வதியும் சங்கரனைப் பார்க்கப்போகின்றீரோ அப்பொழுது உமக்கு மகப்பேறுண்டாகும்; இதற்குச் சந்தேகமில்லை; அந்தத் தேவன் எல்லாவுலகிற்குச் சுகத்தையும், பல்வகைப் பொருள்களையு

மளிப்பவன். தேவர்களும் மனிதர்களும் எப்பொழுதும் அத்தே வனைப்பூஜித்து விரும்பிய பயனையடைகின்றார்கள்.

முற்காலத்தில் குறைவொன்று மில்லாத பீமராஜன் புதல்வி யாகிய உமது தகப்பனுடன் பிறந்த ருக்மணிதேவி தன் கணவ னான கண்ணபிரானோடு கருடவாகன மீதேறிக் கைலயங்கிரியில் வதியும் சங்கரனைப் பூஜித்துப் புகழ்பெற்று ப்ரத்யும்னனென்ற புதல்வனையடைந்தனளன்றோ! ஆகையால் நீவிரும் தேவர்கட்குத் தலைவனான சிவனைக்கைலயங்கிரி சென்று புத்திரப்பேற்றை விரும் பிப் பூஜித்தால் அதன் பலனால் தடையின்றி மகப்பேறுண்டாம்; என்றனர்.

இங்ஙனம் சொல்லக்கேட்ட அரசன் அவ்வேதியர்களை நோக்கி 'பல்லாயிரங்காதவழிதூர மிருக்கும் கைலயங்கிரி செல்வதற்கு என் னால் எங்ஙனமியலும்? இனியான் அணித்தாக கைலயங்கிரியைப் பார்ப்பதற்குரிய சூழ்ச்சியைச் சொல்வீராக' என்று மீண்டும் வேண்டினன்.

அப்பொழுது வேதியர் சொல்லலுற்றனர். இங்கிருந்து ஐம்பது காதவழிக்கப்பால் தென்புறத்தில் எங்கும் புகழ்பெற்ற புண்ணியம் வளரும் காஞ்சி என்ற ஒரு நகரமிருக்கிறது. ஆங்கு இணையற்றதும், அறத்தையளிப்பதும், தன்னைச்சார்ந்தவர்கட்கு இஷ்டத்தைக் கொடுப்பதுமாகிய காமகோஷ்டம் என்ற ஸ்தல முளது. அவ்விடத்தில் விஷ்ணுவையாவது சிவனையாவது விதி முறைப்படி பூஜிப்பவர்கள் விரைவில் விரும்பிய பலன்களை யடை வார்கள். இதில் ஒரு ஐயப்பாடுமில்லை.

பரீக்ஷித்துமஹாராஜாவின் அருமைப் புதல்வனாகிய ஜன மேஜயன் என்பவன் காஞ்சி நகரம் வந்து வேள்வியினால் உல கோர்க்கருள்செய்யும் நாராயணனைச் சேவித்து அவனருளால் க்ஷேபகன் என்ற புதல்வனைப்பெற்று இன்புற்றனன். அதுபோல அரசர் தலைவரே! நீவிரும் காஞ்சிநகர் சென்று தவத்தினாலாவது ஆராதனையினாலாவது உமாபதியை மகிழ்வித்தால் அத்தேவனைத் தரிசிக்கலாம். அதனால் கருதிய பயன் கைகூடும்; என்றனர்.

இதனைக்கேட்ட அரசன் மகிழ்ச்சியுற்று மந்திரி பிரதானியர் முதலானோர் கொண்டாடப் மஞ்சுளை என்ற மனைவியுடன் காஞ்சி நகரடைந்தனன். அதன் பிறகு ஆங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடிக் காமகோஷ்டமடைந்து சிவபிரானை நோக்கித் தவஞ் செய்தனன். இவனது அரிய தவத்திற்கு வியப்புற்ற சிவபிரான், கைலயங்கிரியில் உமாதேவியாருடன் கூடியிருக்கும் நிலைமையைக் காட்டியருளினன். அரசன் அக்காக்ஷியைக்கண்டு மகிழ்ந்து 'தேவனே! கருணையங்கடலே! அடியவர்கட்குச் சுகத்தையளிப்பவனே! உன்னைச் சரண்புகுந்தனன் ; யான் புத்திரப்பேறற்றவனாயிருக்கிறேன் ; என்னை ரக்ஷித்தருளவேண்டும்' என்று வேண்டினன்.

இவ்வரசனுடைய வேண்டுகோளிற்கிரங்கிய சிவபிரான் அரசனை நோக்கி பூபால! நீ விரும்பியபடியே காக்ஷியளித்தேன்; இனி, சிறந்த அறிவும் திருவும கொடையும் வலிமையும், விஷ்ணுபக்தியுமுடைய இரண்டுபுதல்வர்கள் உண்டாவார்கள்; ஒரு காலவிசேஷத்தில் அவர்களும் இங்கு வருவார்கள்; பின்பு அவர்கள் ஸர்வலோகசரண்யனான ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து அசுவமேத யாகஞ் செய்வார்கள்; அப்பொழுது அவ்விறைவன் அவர்கள் விஷயத்தில் இரக்கங்கொண்டு இந்தப்பூமியில் தனது இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தைக் காட்டப்போகிறார் ; யானும் மனிதர்கட்கு அநுக்ரஹஞ் செய்யவேண்டும் என்ற இச்சையால் காஞ்சிநகரில் எப்பொழுதும் வஸிக்கிறேன் ; இவ்விடத்தில் எவர்கள் என்னை அன்போடு சேவிக்கிறார்களோ அவர்கட்குப் புத்திர பௌத்திராதி ஸம்பத்துகளைக் கொடுப்பேன் ; நீயும் உன் மனைவியுடன் இக்காஞ்சியிலிருந்து லிங்கரூபியான என்னைப் பஞ்சாமிருத முதலியவற்றால் அபிஷேகஞ்செய்வாய் ; இவ்வருஷ முடிவில் இரண்டுபுதல்வர்களுண்டாகும்படி அநுக்ரஹிக்கிறேன் ; அதன்பிறகு உன்னிருப்பிடஞ்செல்வாய் ; என்றனன்.

இவ்வுரையினைக்கேட்ட அரசன் அக்காஞ்சிநகரிலிருந்து பகல் இரவு என்ற இரண்டு காலங்களிலும் பக்தியுடன் ஒரு வருஷம் வரையில் சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்துவந்தனன். அரசன் மனைவியாகிய மஞ்சுளையும் அபிஷேகத்திற்காகக் குடத்தில் தீர்த்த

மெடுத்துக்கொடுத்தனள். அவ்விடத்தில் மஞ்சனமாட்டிய புனலால் மங்களகரமான ஆற்றுப்பெருக்குண்டாகி, அது மஞ்சுளேயென்ற பெயருடன் புனிதமான நதியாயிற்று.

பின்பு வருஷமுடிவில் அரசனுச்கு மஞ்சுளேயினிடத்தில் சங்கரனுடைய அநுக்ரஹத்தால் மன்மதனைப்போன்ற அழகுபடைத்த பல்லவன் வில்லவன் என்ற இரண்டு புதல்வர்கள் உண்டானார்கள். இவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் ஜயன் விஜயன் என்ற இரண்டு வாயிற்காப்பாளராவர்கள்.

இவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் கிழக்குவாசலிற் காவல்புரிந்து எம்பெருமானுக்குக் கைங்கர்யஞ் செய்துகொண்டுவருகிற காலத்தில் ஸனகாதியர் எம்பெருமானைத் தரிசிப்பதற்காக வந்தபோது இவர்கள் தடைசெய்தனர். அப்பொழுது ஸனகாதியர் முனிந்து, 'நீங்கள் பூலோகத்தில் அசுரராகவும், ராக்ஷஸராகவும், இராஜாக்களாகவும் பிறக்கக்கடவீர்கள்; இந்த மூன்று பிறவிகளில் விஷ்ணுவுக்குச் சத்துருக்களாயிருப்பீர்கள்; அவர் உங்களைச் சங்கரிப்பார்; என்று சபித்தார்கள்'.

அப்பொழுது அவ்வாயில்காப்பாளர்கள் ஸ்ரீவைகுண்டநாதனைநோக்கி, 'தேவ தேவ! தேவரீருக்குத் தொண்டுசெய்துகொண்டிருந்த அடியோங்கள் ஸனகாதியர் சாபத்தால் அசுர ராக்ஷஸ ஜன்மங்களிற் பிறந்து துன்புறுதிருக்கும்படி கிருபைசெய்தருள வேண்டும்' என்று வேண்டினார்கள்.

அப்பொழுது எம்பெருமான் அவர்களைநோக்கி, 'என்னுடையபக்தர்களாகிய ஸனகாதியர்கொடுத்த சாபத்தை நீங்கள் அநுபவித்தே தீரவேண்டும்; நீங்கள் கிரேதாயுகத்தில் இரண்டு அசுரர்களாகவும், திரேதாயுகத்தில் இரண்டு இராக்ஷஸர்களாகவும், துவாபரயுகத்தில் இரண்டு ராஜாக்களாகவும் பிறப்பீர்கள். அந்த மூன்று பிறவிகளிலும் யானே அவதரித்து உங்களைச்சங்கரிப்பேன். நான்காவது பிறவியில் விதர்ப்பதேசத்தில் அரசர்களாய்ப்பிறந்து சிறந்த அறிவுடையவர்களாய் என்னிடத்தில் மிக்க அன்புபடைத்தவர்களாயிருப்பீர்; அதன்பிறகு எனக்கு உகப்பான க்ஷேத்திரத்தில்

சிறந்த வேதியருடன்கூடி, அசுவமேதயாகஞ்செய்வீர்கள்; அப்பொழுது உங்கட்கு வைகுண்ட ஸ்தானத்தைக்காட்டி அடிமை கொள்வேன்; என்றருளினன்.

பின்பு விதர்ப்பதேசாதிபதியாகிய விரோசனனும், மஞ்சுளையும் தமக்குப் புத்திரப்பேறுண்டானதை நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைந்தனர். அப்புதல்வர்கட்குத் தக்க யௌவனம்வந்தவுடன் அரசன் அவர்கட்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வித்துத் தன்மனைவியுடன் கைலயங்கிரி சென்றான்.

அதன் பிறகு பல்லவன் வில்லவன் என்பவர் தம்முயிரைப் போல் மன்னுயிரையும் பாதுகாத்துவந்தனர். இவர்களது வீரத்தையும் அருளையும் கொடையையும் புகழாதார் ஒருவருமில்லை. இவ்வாறு இவர்கள் வாழ்ந்துவருகிற காலத்தில் அசுவமேதயாகஞ் செய்யத்தொடங்கினர். யாகப்பூர்த்தியில் அக்கினிகுண்டத்திலிருந்து விரஜாநதிபோன்ற ஓர் புனித நதியுண்டாயிற்று. ஸ்ரீமந் நாராயணனும் பரமபததிலிருக்கும இருப்பை இக்காஞ்சிநகரில் காட்டியருளினன். இவர்களும் கண்டுகளித்து ஆனந்தபரவசமாகித் தொண்டுபூண்டொழுகினர்கள்.

இந்தக்காஞ்சியில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீவைகுண்டப் பெருமாளைக்கண்டு ஸேவித்தவர்கள் எவர்களாயினும் அவர்கள் விரும்பிய பயனைப்பெற்று இன்புறுவார்கள். இந்த மகாத்மியம் காஞ்சிஸ்தலபுராணம் முப்பதாவது அத்யாயத்திற் சொல்லப் பட்டுளது.

ஸ்ரீ:

சூரிய ரதத்தின் பெருமை.

சூரியனுடைய இரதம், ஒற்றைச் சக்கரமுடையதாயும் ஏழு குதிரைகள் பிணைக்கப்பெற்றதாயுமிருக்கும். இதில், சித்திரை மாதம் முதல் ஒவ்வொரு மாதத்திலும் வெவ்வேறு பெயருடைய சூரியனும், ரிஷி முதலான சிலரும் ஆரோகணித்துச்செல்கின்றனர். சித்திரைமாதத்தில் அந்த இரதத்தில் தாதா என்ற சூரியனும் கிருதஸ்தலே என்ற அப்ஸரசும் புலஸ்தியர் என்ற ருஷியும் வாசுகி என்ற பாம்பும் ரதபிருத் என்ற யக்ஷனும் ஹேதி என்கிற இராக்ஷஸனும், தும்புரு என்ற கந்தர்வனும் ஏறி நடத்துவர்கள். வைகாசி மாதத்தில் அர்யமா என்ற சூரியனும், புலகரன் என்ற ருஷியும் புஞ்சிகஸ்தலே என்ற அப்ஸரசும், ரதௌஜஸ் என்ற யக்ஷனும் கச்சவீரன் என்ற பாம்பும, நாரதன் என்ற கந்தர்வனும், பிரஹேதி என்னும் இராக்ஷஸனும் அதிலிருப்பார்கள். ஆனிமாதத்தில் மித்திரன் என்ற சூரியனும் அத்திரி என்ற ருஷியும், தக்ஷகன் என்ற பாம்பும், பவருஷேயன் என்ற இராக்ஷஸனும், மேனகை என்ற அப்ஸரசும் ஹாஹா என்ற கந்தர்வனும், ரதஸ்வனன் என்ற யக்ஷனும் அதில ஆரோகணித்திருப்பார்கள்.

ஆடிமாதத்தில் வருணன் என்ற சூரியனும், வஸிஷ்டர் என்ற ருஷியும், ஸகஜயை என்ற அப்ஸரசும், ஹூஹூ என்ற கந்தர்வனும், நாகன் என்ற பாம்பும், ரதன் என்ற இராக்ஷஸனும் சுத்திரன் என்ற யக்ஷனும் அதிலிருப்பார்கள். ஆவணிமாதத்தில் இந்திரன் என்ற சூரியனும், விசுவாவசு என்ற கந்தர்வனும், சுரோதா என்ற யக்ஷனும், ஏலாபுத்திரன் என்ற ஸர்ப்பமும், அங்கிரஸ் என்ற ருஷியும், பிரமலோசை என்ற அப்ஸரசும் ஸர்ப்பி என்ற அரக்கனும் அதிற் குழுமியிருப்பர்கள். புரட்டாசி மாதத்தில் விவஸ்வான் என்ற சூரியனும், பிருகு என்ற ருஷியும், அநும்லோசா என்ற அப்ஸரசும், சங்கபாலன் என்ற பாம்பும் வியாக்கிரன் என்ற இராக்ஷஸனும், உக்கிரஸேனன் என்ற கந்தர்வனும், அபூர்ணன் என்ற யக்ஷனும் அதிற் கூடியிருப்பார்கள்.

ஐப்பசி மாதத்தில் பூஷா என்ற சூரியனும், வசுருஷி என்ற கந்தர்வனும், வாதன் என்ற இராக்ஷஸனும், தனஞ்சயன் என்ற பாம்பும், கௌதமர் என்ற ருஷியும், கிருதாசி என்ற அப்ஸரசும், ஸுஷேஷணன் என்ற யக்ஷனும் இருப்பார்கள். கார்த்திகை மாதத்தில் பர்ஜனியன் என்ற சூரியனும், விசுவாவசு என்ற கந்தர்வனும், பாரத்துவாஜர் என்ற ருஷியும், ஐராவதம் என்ற ஸர்ப்பமும், விசுவாசி என்ற அப்ஸரசும், ஸேனஜித்து என்ற யக்ஷனும், ஆல என்ற இராக்ஷஸனும் கூடியிருப்பார்கள். மார்கழி மாதத்தில் அம்சன் என்ற சூரியனும் காசிபர் என்ற ருஷியும், தார்க்ஷயன் என்ற யக்ஷனும், மகாபத்துமன் என்ற பாம்பும் வித்துயுத்து என்ற இராக்ஷஸனும், சித்திரஸேனன் என்ற கந்தர்வனும், ஊர்வசி என்ற அப்ஸரசும் சேர்ந்திருப்பார்கள். தைமாதத்தில் பகன் என்ற சூரியனும், கிரது என்ற ருஷியும், ஊர்ணயு என்ற கந்தர்வனும், ஸபூர்ஜன் என்ற இராக்ஷஸனும் கார்க்கோடகன் என்ற பாம்பும், அரிஷ்டநேமி என்ற யக்ஷனும், பூர்வசித்தி என்ற அப்ஸரசும் ஆங்கிருப்பார்கள். மாசிமாதத்தில் துவஷ்டா என்ற சூரியனும், ஜமதக்கினி என்ற ரிஷியும், தமை என்ற அப்ஸரசும், கம்பளன் என்ற பாம்பும்,பிரம்மாபேதன் என்ற இராக்ஷஸனும், ஹ்ருதசித்து என்ற யக்ஷனும், திருதராஷ்டிரன் என்ற கந்தர்வனும், கூடியிருப்பார்கள். பங்குனிமாததில் விஷ்ணு என்ற சூரியனும், விசுவாமித்திரன் என்ற ருஷியும், ரம்பை என்ற அப்ஸரசும், சூரியவர்ச்சஸ் என்ற கந்தர்வனும், மத்தியஜித்து என்ற யக்ஷனும் அசுவதரன் என்ற ஸர்ப்பமும், யக்ஞயாபேதன் என்ற இராக்ஷஸனும் ஆங்கு வாசஞ் செய்வார்கள்.

இங்ஙனம் ஒவ்வொரு மாதத்திலும் எழுவர் எழுவராகச் சூரிய ரதத்தில் குழுமியிருப்பார்கள். இவர்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனுடைய சக்தியைப்பெற்று உலகில் ஒளியைப்பரப்பும் பெற்றியராயினர். ஒவ்வொரு மாதத்திலும் வெவ்வேறு பெயருடன் பிரகாசிக்கின்ற சூரியனுக்கு ஒளிமிகும்படி அவனுடன் கூடியிருக்கின்ற ஏனையோர்கள் துதிசெய்கிறார்கள். கந்தர்வர்கள் கானஞ்செய்கின்றனர் அப்ஸரப்பெண்கள் நடிக்கின்றனர்; இராக்ஷ

ஸர்கள் சூரியனுக்குப்பின் செல்கின்றார்கள்; ஸர்ப்பங்கள் சுமக்கின்றன; யக்ஷர்கள் கடிவாள முதலியவற்றைப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களல்லாமலும் பிரமதேவனிடத்திலிருந்து தோன்றிய வாலகில்யர் என்ற இருடிகளும் எப்பொழுதும் சூரியனைச் சூழ்ந்து கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணி, இராமாநுஜகூடக் கைங்கர்யம்.*

வேதத்தைவேதத்தின்சுவைப்பயனைவிழுமியமுனிவர்விழுங்கும்
கோதிலின்கனியைநந்தனர்களிற்றைருவலயத்தோர்தொழுதேத் [தும்
ஆதியையமுதையென்னையாளுடையப்பனையொப்பவரில்லா
மாதர்கள்வாழ்மாடமாமயிலைத்திருவல்லிக்கேணிகண்டேனே.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரன் உகந்தருளின நிலங்கள் பலவற்றுள் ஆழ்வார்களால் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்ற திவ்யதேசங்கள் நூற்றெட்டென்பர். அவற்றுள்ளும் திருவல்லிக்கேணி என்ற திவ்யதேசமும் சிறந்ததொன்றாகும். இதில் ஸ்ரீ பார்த்தசாரதி, ஸ்ரீரங்கநாதன், சக்கரவர்த்தித்திருமகன், தேவப்பெருமாள், தெள்ளியசிங்கர் என்ற ஐந்து எம்பெருமான்களும் ஆழ்வாரால் மங்களாஸாஸனஞ்செய்யப்பெற்றபெருமையுடையவர்களாய் விளங்குகின்றனராதலால் இஃதொரு திவ்யதேசமாயிருக்கினும் ஐந்து திவ்ய

* இக்கைங்கர்ய விஷயத்தில் உபகரிக்கவேண்டுமென்ற விருப்பமுடையவர்கள் தம்மாலியன்றவளவு கீழ்க்கண்ட விலாசத்திற்கு மணியார்டர்மூலமாக அனுப்பவேண்டுகிறேன்.

விலாசம்: ஸ்ரீமாந் ஆர். அப்பாத்துரை முதலியாரவர்கள்,
திருவல்லிக்கேணி ராமாநுஜகூடக் கைங்கர்ய சப்கமிட்டி மெம்பர்,
5/6 நிர். வீடு நல்லதம்பிமுதலித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

தேசமென்று மதிக்கும் சீர்மையுடையதாய் விளங்குகிறது. புராணத்திலும் இதன் பெருமை பரக்கச் சொல்லப்பட்டுள்ளது.

அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எல்லோருக்கும் ஸேவைசாதிக்கும் எளிமையுடையவனாயிருக்கினும் அநந்யப்பிரயோஜனர்களாகிய மெய்யடியார்கள் தன்னை வந்து ஸேவித்து மங்களாசாஸனஞ் செய்வதில் மிகவும் திருவுள்ள முகந்திருப்பன். இத்தகைய மெய்யடியார்கள் இத்திவ்ய தேசத்திற்கு வந்துதங்கிச்செல்வதற்கு இடமில்லாதிருக்கின்றபெருங்குறை திவ்ய தேசத்திற்குநேர்ந்த குறையென்றே சொல்லலாம். திவ்யதேசத்திற்கு நேர்ந்த குறைவு நிறைவுகளைத் தம்மதாகக் கொள்ளவேண்டும் கடமை, வைஷ்ணவர்கட்குளதாமென்பது நான்முடிபன்றே!

இக்குறையினை நிறைவேற்றவேண்டுமென்று சென்னை ஸ்ரீ வைஷ்ணவமஹா சங்கம் முயன்றுகொண்டிருப்பதை யாவருமறிவர். ஷை சங்கத்தின் நிர்வாஹஸபை மெம்பர்களுள் ஒருவராகிய ஸ்ரீமாந் அப்பாத்துரை முதலியாரவர்கள் திருவலிக்கேணியில் சன்னிதிக்குச் சமீபத்தில் ஒரு வீட்டை 5000 ரூபா கிரயம்பேசி வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார். ஷை வீட்டைச் சங்கத்தின் பெயரால் வாங்கித் தேசாந்தர பாகவதர்கட்கு உபகாரமாம்படி செய்யவேண்டியதவசியமாயிருப்பதால் தர்மசிந்தையுடையவரனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து இக்கைங்கர்யம் பூர்த்தியுமாறு செய்ய வேண்டுகின்றனம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்கத்தார்.

K. வெங்கடசாமி நாயுடுகாரு, B.A.; B.L.,
பு. இராகவராமாநுஜ தாஸர்,
ஆ. அரங்கராமாநுஜ தாஸர்,
K. விஜயராகவலு நாயுடு,
V. L. ராஜகோபால் நாயுடு,
R. அப்பாத்துரை முதலியார்.

இராமாநுஜகூட சப்கமிட்டி.

ஸ்ரீ:

மதிப்புரை.

—:o:—

தமிழ்ப்பேரகராதி:-சென்னைச்சர்வகலா சங்கத்தார்கள், நீண்ட பல்லாண்டுகளாக விடாமுயற்சியுடன் பதிப்பித்து வரும் இவ்வகராதியின் நான்காவது தொகுதியின் நான்காவது பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது. இதில் தமிழ் நூல்களில் வழங்கப்பெறுகின்ற சொற்கள் மாத்திரமின்றி, வேதாந்தங்களில் வழங்கப்பெறுகின்ற இன்றியமையாத சில சொற்கட்கும் தமிழ்ப்பொருளோடு ஆங்கிலத்திலும் பொருளெழுதப்பெற்றுளது. மேலும், இதில் வழங்கப்பெற்ற சொற்கட்கு ஆகாரங்காட்டியிருப்பதாலும், இதுவரையும் அச்சிடப்பெறாத பல வரிய செற்கள் பயின்று வருதலாலும், சமயவாதியர்களின் சங்கேதசசொல் விரவியிருத்தலாலும் இது பலகலைகளிலும் வல்ல பலபண்டிதர்களின் உதவிபெற்று வெளியாகிறதென்பது தெற்றெனப்போதரும். இதில் "பஞ்சீகரித்தல்" என்ற சொன்முதல் "பக்ஷிராஜன்" எனனும சொல்விறுதியாக எத்தனையோ பல சொற்கட்குப் பொருளெழுதப்பெற்றுளது. தமிழுலகிற் குபகாரமாகப் பொருண்மிகச் செலவிட்டு இப்பணியை மேற்கொண்டுள்ள அதிகாரிகளின் நன்முயற்சி போற்றத்தக்கதே. இப்பகுதியில் 159 பக்கங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூபாய் 2—0—0 விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்பெற்ற விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்க.

THE MADRAS LAW JOURNAL OFFICE,
Post Box 604, Mylapore, MADRAS.

பத்திராதிபர்.